2014 ஜூலை 24]

இருக்கின்ற திருப்பூண்டி ஆகிய ஏதாவது ஓர் இடத்தில் ஒரு கால்நடை நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதமுள்ள வினாக்கள் நாளை எடுத்துக்கொள்ளப்படும். வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) பெரியபாளையம் அருகே இரண்டு கிராம மக்களிடையே நடைபெற்ற மோதல் சம்பவம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே இரண்டு கிராம மக்களிடையே 22—7—2014 அன்று நடைபெற்ற மோதல் குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி.எச். சேகர், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. அ. பாஸ்கர், திரு. எல். வெங்கடேசன் ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. ஆர். ராமமூர்த்தி, திரு. வீ.பி. நாகைமாலி ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. லிங்கமுத்து, திரு. ந. நஞ்சப்பன், திரு. டி. இராமச்சந்திரன், திரு. பி.எல். சுந்தரம் ஆகியோரும், பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்களும், மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் மற்றும் புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகியோர் சட்டமன்றப் பேரவை*

விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து அறிவிப்புக் கொடுத்தவர்களில் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

***திரு. எல். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பாக திருவள்ளூர் மாவட்டத்தில் இரு கிராமங்களுக்கிடையே மோதல் ஏற்பட்டு, அதன் தொடர்ச்சியாக அந்தப் பகுதியில் இரு சமுதாய மக்களிடையே மிகப் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. எனவே, அப்பகுதி மக்களின் பதற்றத்தைத் தணித்து, பொது மக்கள் அமைதியாக வாழ்ந்திட, அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

***திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே உள்ள வெள்ளியூர் மற்றும் புன்னப்பாக்கம் ஆகிய இரு கிராமங்களில் 22–7–2014 அன்று நடைபெற்ற ஒரு சம்பவத்தில், இரு சமூகங்களைச் சேர்ந்தவர்களிடையே ஏற்பட்ட தகராறு, கைகலப்பு, அடிதடியில் 10–க்கும் மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் பிரச்சினையின் உள்ளே போகாதீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லுங்கள்.

திரு. ப. டில்லி பாபு: இந்தச் சம்பவத்தினுடைய பாதிப்பு பக்கத்தில் இருக்கக்கூடிய அரிக்கம்பேடு, குருவாயல் போன்ற பகுதிகளிலெல்லாம் பரவி இருக்கின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய பணிவான கவனத்திற்குக் கொண்டுவருவது, இந்தச் சம்பவம் தொடராமல் உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கும், அங்கே அமைதியான சூழலை ஏற்படுத்துவதற்கும், குற்றம் புரிந்தவர் யாராக இருப்பினும் உரிய தண்டனையை வழங்குவதற்கும், அந்தப் பகுதிகளில் இயல்பு

நிலையைக் கொண்டுவருவதற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகில் இருக்கக்கூடிய கிராமத்தில் இரு சமூகத்தினரிடையே 22–7–2014 அன்று ஏற்பட்ட சட்டம்–ஒழுங்கு பிரச்சினை ஒரு பதற்றமான சம்பவமாக மாறியிருக்கிறது. குறிப்பாக, கடந்த 2 ஆண்டுக்காலமாக அந்தப் பகுதியிலே இயங்கி வரக்கூடிய சில அரசியல் கட்சிகள் மற்றும் சமூக அமைப்புகள் இன்றைக்கு ஒரு பதற்றத்தை உருவாக்குகிற விதமாக, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், பிரச்சினையின் உள்ளே போகாதீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி உட்காருங்கள். நீங்கள்* detail-*ஆகப் பேசாதீர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *ஒரு சாதாரண பிரச்சினைகூட இன்றைக்குச் சமூகப் பிரச்சினையாக மாற்றப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஏற்கெனவே பல பிரச்சினைகளில் உறுதியான நிலையை மேற்கொண்டதைப்போல, இந்தப் பிரச்சினையிலும் உறுதியான நிலையை மேற்கொண்டு, எதிர்காலத்தில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் தமிழகத்தில் ஏற்படாதவண்ணம் தடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 22–7–2014 அன்று திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே, கொசஸ்தலை ஆற்றில் மணல் எடுப்பதில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட மோதல் பெரிய கலவரமாகியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதைப்பற்றியெல்லாம் பேசவேண்டாம். மக்களிடையே ஏற்பட்டுள்ள பதற்றம் குறித்து மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *பொது மக்களின் அன்றாட அமைதி வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கலவரத்திற்கான காரணத்தை ஆராய்ந்து, துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்தை பணிவோடு ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 22 ஆம் தேதி, பெரியபாளையம் அருகே புன்னப்பாக்கம், வெள்ளியூர் ஆகிய கிராமத்தினருக்கிடையே மணல் அள்ளுவதில் பிரச்சினை தொடங்கியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், அதைப்பற்றியெல்லாம் நீங்கள் சொல்லவேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. அ. கணேஷ்குமார்: *இது தொடர்பாக இரண்டு கிராமத்தினருக்கிடையே ஏற்பட்டுள்ள மோதல் போக்கு, மேலும் பரவாதவண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையத்திற்கு அருகிலே, இரு கிராமத்தினருக்கிடையிலே நடைபெற்ற மோதலைத் தொடர்ந்து, இன்னமும் புன்னப்பாக்கம், வெள்ளியூர், தாமரைப்பாக்கம், பூச்சி அத்திப்பேடு, தரிசு, லட்சுமிநாதபுரம், அரிக்கம்பேடு, அணைக்கட்டு ஆகிய பகுதிகளில் பதற்றம் நீடிக்கின்றது. இந்தப் பதற்றத்தைத் தணிப்பதோடு, இந்தப் பிரச்சினைக்கு மூலகாரணமானவர்கள்மீது*

2014 ஜூலை 24] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

டாக்டர் க. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் மற்றும் சுற்று வட்டார கிராமங்களில் நிலவக்கூடிய அசாதாரணமான சூழ்நிலையின்மீது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானி அம்மன் கோயிலில் நடைபெறும் ஆடி மாதத் திருவிழாவிற்கு வரும் பொது மக்கள், வெங்கல் காவல் நிலையச் சரகம், அணைக்கட்டுப் பகுதியிலுள்ள செண்பகாதேவி கோயில் திருவிழாவிலும் கலந்துகொள்வது வழக்கம். கடந்த 20–7–2014 அன்று மாலை சுமார் 6 மணியளவில், திருவிழாவை முன்னிட்டு, அணைக்கட்டுப் பகுதியில் இராட்டினத்தில் விளையாடுவது தொடர்பாக, புன்னப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த ஹேமக்குமார் என்கிற வசந்த் என்பவருக்கும், வெள்ளியூர் காலனியைச் சேர்ந்த அபினேஷ் என்பவருக்கும் யார் முதலில் ஏறுவது என்பதில் பிரச்சினை ஏற்பட்டு, கைகலப்பு ஆகியுள்ளது. இச்சம்பவம் குறித்து 21–7–2014 அன்று அபினேஷ், வெங்கல் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.*

இதனைத் தொடர்ந்து கதிர்வேடு கிராமத்தைச் சேர்ந்த தனசேகர் என்பவர் வெங்கல் காவல் நிலையத்தில் அளித்த புகாரில், கதிர்வேடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமத்தைச் சேர்ந்த வெள்ளியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்துவரும் சில மாணவர்கள் தங்கள் கையில் மஞ்சள் நிற கயிறு கட்டக்கூடாதெனவும், நீல நிறக் கயிறு கட்டவேண்டுமென்றும் வேறு சில மாணவர்கள் மிரட்டியதாகக் கூறி நடவடிக்கை எடுக்கக் கோரி மனு அளித்துள்ளார்.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2014 ஜூலை 24

மேற்படி புகார்கள் தொடர்பாக, 22–7–2014 அன்று, காவல் துறையினர் இரு தரப்பினரையும் விசாரணைக்கு அழைத்திருந்த நிலையில், 22–7–2014 அன்று காலை சுமார் 9 மணியளவில் புன்னப்பாக்கத்தைச் சேர்ந்த குருமூர்த்தி என்பவர் தனது மகேந்திரா வேனில் பூ மூட்டைகளை ஏற்றிக்கொண்டு, தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலையில் வந்தபோது, வெள்ளியூர் காலனியைச் சேர்ந்த நிஷாந்த் உள்ளிட்ட சிலர் வாகனத்தை வழிமறித்து குருமூர்த்தியைத் தாக்கியதோடு, வாகனத்தின் கண்ணாடிகளைச் சேதப்படுத்தியுள்ளனர். இத்தகவல் அறிந்து, புன்னப்பாக்கத்தைச் சேர்ந்த சுமார் 250 பேர் பெரியபாளையம் சாலையில், சாலை மறியல் செய்தனர். பின்னர் அவர்கள் காவல் துறையினர் தலையீட்டின்பேரில் கலைந்து சென்றுள்ளனர்.

இதனை அடுத்து, புன்னப்பாக்கம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்த சிலர், சுமார் 11 மணியளவில், தாமரைப்பாக்கம் காலனியில் இருந்த இரண்டு இரு சக்கர வாகனங்களையும், ஒரு வீட்டையும் கல் வீசி சேதப்படுத்தியுள்ளனர்.

முற்பகல் 11–05

மேலும், அரிக்கம்பேடு கிராமத்தைச் சேர்ந்த ஏழுமலை உள்ளிட்ட ஐந்து பேர், பூ மூட்டைகளை சென்னைக்குக் கொண்டு செல்வதற்காக, பூச்சி அத்திப்பேடு என்ற கிராமத்தில் நின்று கொண்டிருந்தபோது, கோடுவள்ளி மற்றும் தரிசு காலனியைச் சேர்ந்த சிலர் அவர்களை மரக் கட்டைகளால் தாக்கியுள்ளனர். இச்சம்பவத்தில் காயம்பட்ட அனைவரும் சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இத்தகவல் அறிந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் போதுமான காவலர்களுடன் சம்பவ இடத்திற்குச் சென்று, அப்பகுதியில் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து, இரு தரப்பினருக்கும் மேலும் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக் கொண்டனர். நிலைமை கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவங்கள் தொடர்பாக, வெங்கல் காவல் நிலையத்தில் மொத்தம் ஐந்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 11 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். தாமரைப்பாக்கம் கூட்டுச் சாலை, புன்னப்பாக்கம், வெள்ளியூர்,

2014 ஜூலை 24] [செல்வி ஜெ ஜெயலலிதா]

பூச்சி அத்திப்பேடு, அரிக்கம்பேடு மற்றும் கொமக்கம்பேடு ஆகிய கிராமங்களில் காவல் துறையினர் தொடர்ந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தச் சம்பவத்திற்கு கொசஸ்தலை ஆற்றில் மணல் எடுப்பதில் ஏற்பட்ட முன் விரோதம் காரணம் என்பது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சிதம்பரம், அண்ணாமலை நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கொலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *22-7-2014 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம், அண்ணாமலை நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள், வீட்டில் கொலை செய்யப்பட்டது குறித்து. தே.மு.தி.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. விசி. சந்திரகுமார், திரு. ப. பார்த்தசாரதி, திரு. ப. சிவக்கொழுந்து, திரு. கு. நல்லதம்பி, திரு. ஏ.கே.டி. ராஜா, இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. வீபி. நாகைமாலி, இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. கு. லிங்கமுத்து, திரு. ந. நஞ்சப்பன், திரு. டி. இராமச்சந்திரன், திரு. பி.எல். சுந்தரம், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. என்.ஆர். ரெங்கராஜன், திரு. எஸ். ஜாண் ஜேக்கப், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் ஆகியோர் சட்டமன்ற விதி 55-ன்கீழ் அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்பு கொடுத்தவர்கள், கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலிலே திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

திரு. வி.சி. சந்திரகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முன்தினம், கடலூர் மாவட்டம், அண்ணாமலை நகரில், காவல் துறையின் உதவி ஆய்வாளர் ஒருவர், திருமணமாகி 15 தினங்களுக்குள்ளாகவே, அரிவாளால் வெட்டி, படுகொலை செய்யப்பட்டுள்ளார். இதற்குக் காரணமானவர்களைக் காவல் துறை உடனடியாகக் கைது செய்திருந்தாலும், இனியும் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருக்கும்வண்ணம், துறைரீதியான தனி*